**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**08 ஏப்ரல் 2016 / 30 ஜமாதியுல் ஆகிர் 1437**

# பணிவு என்பது முஸ்லிமின் நன்னடத்தைகளில் ஒன்றாகும்

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நமது ஒவ்வொரு மூச்சிலும், நமது சொல் மற்றும் செயல்பாடுகளின் மூலமாக அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" எனும் பக்தியை அதிகரித்துக் கொள்வோமாக! அவன் நமக்குத் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து நம்மால் முடிந்த அளவு தவிர்ந்து கொள்ள முயற்சிப்போமாக! அல்லாஹ்வின் "மஃபிரத்" (பாவமன்னிப்பை) பெற்ற அடியார்களில் நின்றும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-இஸ்றா" எனும் அத்தியாயத்தின் 37-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَلَا تَمْشِ فِي ٱلْأَرْضِ مَرَحًا ۖ إِنَّكَ لَن تَخْرِقَ ٱلْأَرْضَ وَلَن تَبْلُغَ ٱلْجِبَالَ طُولًا ﴿٣٧﴾

பொருள்: மேலும், நீர் பூமியில் பெருமையாய் நடக்க வேண்டாம்; (ஏனென்றால்) நிச்சயமாக நீர் பூமியைப் பிளந்துவிட முடியாது; மலையின் உச்சி(யளவு)க்கு உயர்ந்து விடவும் முடியாது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

கடந்த வாரப் பிரசங்கத்தில், கல்வி கற்கும் விஷயத்தில் நாம் பணிவாக நடந்து கொள்ள வேண்டுமென விவாதித்தோம். "தவாதுஃ" (பணிவு) என்பது அல்லாஹ்வின் பார்வையில் மிக உயர்ந்த அந்தஸ்தை வழங்கும் ஒரு பண்பாகும். திருக்குர்ஆனும் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" (வழிமுறையும்) வலியுறுத்திக் கூறும் பண்புகளில் ஒன்றாகும். காரணம், பணிவு தான் உள்ளத்தைப் பரிசுத்தமாக்குவதாகவும், ஒருவரின் "அக்லாக்" (நடத்தையை) அழகாக்குவதாகவும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா மற்றும் சக மனிதர்களுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு அஸ்திவாரமிடுவதாகவும் உள்ளது. அல்லாஹ்வின் முன்னிலையில் நாமெல்லாம் அடிமைகளின் அந்தஸ்தைத் தான் பெற்றுள்ளோம் எனப் பணிவு நமக்கு நினைவூட்டுகிறது. அடிமைத்தன உணர்வை நம்மிடம் ஏற்படுத்துகிறது. நாமெல்லோரும் சகோதரர்கள், நம்மைப் படைத்த "அல்-காலிக்" (படைப்பாளனாகிய) அல்லாஹ்வையே நாம் முழுமையாக சார்ந்திருப்பதும், அல்லாஹ்வின் மற்ற படைப்புகளுடன் ஒன்றுபட்டு வாழ்வதும் அவசியம் எனவும் நமக்கு நினைவூட்டுகின்றது.

ஜமாஅத்தார்களே!

பணிவு இல்லையெனில் கர்வமும் அகங்காரமும் நம்மிடம் குடிகொண்டு விடும். அவை நமக்கும் மற்றவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். உண்மையில், பணிவு தான், மனிதர்களுக்கிடையே ஏற்படும் கடும் வெறுப்பையும் அடக்குமுறைகளையும் அகற்றுவதாகும். கர்வமும், மற்றவர்களை மதிக்காத நடத்தைகளும் தான் கருத்துவேறுபாடுகளுக்குக் காரணமாக உள்ளன. நாம் மட்டுமே சரியாக உள்ளோம்; மற்றவர்களை விடச் சிறப்பாக உள்ளோம் எனும் மனப்பான்மை பகைமை, விரோதம் எனும் நெருப்பை மூட்டுவதாக உள்ளது. நம்மைச் சுற்றிலும் நடைபெறும் நிகழ்வுகளில் கவனம் செலுத்துங்கள்! நாம் கர்வமும் தற்பெருமையுமிக்க நண்பர்களைப் பெற்றிருந்தால், அவர்கள் மற்றவர்களின் உபதேசத்தைக் கேட்காதவர்களாகவும், அவர்களின் சொல், செயல்கள் தவறாக இருந்த போதிலும் எவ்வித உபதேசத்தையும் ஒத்துக் கொள்ளாதவர்களாகவும் இருப்பதைக் காணலாம். இவ்விதமானப் போக்கு அவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் தீங்காக அமைகின்றது. உதாரணமாக, சிலவேளை தொழிற்கூடங்களில், பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்களையும் வழிகாட்டுதல்களையும் கண்டிப்பாகப் பின்பற்ற மறுக்கும் கர்வம் கொண்ட சில சக ஊழியர்களின் காரணமாக விபத்துகள் நிகழ்வதைக் காண்கிறோம்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

மேற்கூறப்பட்ட கருத்து, கர்வம் நம்மிடம் ஏற்படுத்தும் உடல் சம்பந்தமான எதிர் விளைவுகளுக்கு உதாரணம் ஆகும். கர்வம் நமது ஆன்மீகத்தையும் பாதிக்கும் தன்மையாகும். சொர்க்கத்தின் பால் செல்லும் பாதையில் வழிதவறி விடுவதற்குக் காரணமாகவும் அது உள்ளது. ஒருவர் அல்லாஹ்வின் விஷயத்தில் இன்னும் கர்வத்துடன் காணப்படுகிறார் எனில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா தான், அவருக்கு உடல்

நலத்தையும், செல்வத்தையும், குடும்பம் மற்றும் அமைதியான வாழ்க்கையையும் வழங்குகிறான் என்பது உண்மையாக இருக்க, அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அவர் கட்டுப்படாமல் இருக்கின்றார் எனில், அவர் அல்லாஹ்வின் ஒரு சாதாரணமான அடிமை என்பதை அவர் மறந்து விடுகிறார் எனில், அல்லாஹ் அவருக்கு வழங்கிய அனைத்து அருட்கொடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அல்லாஹ்வுக்கு "ஸஜ்தா" செய்ய (வணங்கி வழிபட) மறுக்கின்றார் எனில், வருடத்தில் ஒருமுறை "ஜகாத்" (ஏழை வரியை) செலுத்த மறுக்கின்றார் எனில், அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கட்டுப்படாமலிருப்பது ஒருபுறமிருக்க, பாவங்களைப் புரிவதன் மூலம் அல்லாஹ்வின் கட்டளைகளை மீறி நடக்கின்றார் எனில், கர்வம் அவரது உள்ளத்தில் குடிகொண்டு அவரது ஆன்மீகத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றே கூற முடியும்.

ஜமாஅத்தார்களே!

வணக்க வழிபாடுகளை ஏற்கனவே ஆர்வத்துடன் செயல்படுத்தி வரும் நம்மில் சிலர், நான் தற்போது கூறிய விபரங்களைக் கேட்டு, அவற்றை ஏற்றுக் கொள்ளும் வகையில் தலையாட்டுபவர்களாக இருக்கலாம். எனினும், முதன்முதலாக எனக்கும், மார்க்க விஷயத்தில் ஏற்கனவே ஆர்வமிக்கவர்களாகத் திகழும் மற்றவர்களுக்கும் நான் நினைவூட்டிக் கொள்வது யாதெனில், நாம் இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவும் வாய்ப்பைப் பெற்றுள்ளோம்; அதனை நமது அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்தும் வாய்ப்பையும் பெற்றுள்ளோம் எனும் கர்வம் நம்மில் குடிகொண்டு விடக் கூடாது என்பதாகும். மற்றவர்களை விட நாமே சிறந்தவர்கள் எனக் கருதக் கூடாது. காரணம், ஷைத்தான் நமது வணக்க வழிபாடுகளிலிருந்து நம்மைத் தடுக்கும் ஆற்றலை இழக்கும் போது, நம்மிடம் காணப்படும் பக்தியின் மூலம் நமக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ய

முற்படுவான். அது எவ்வாறெனில், நமது பக்தியைக் கொண்டு நாம் கர்வம் கொள்ளுமாறு நம்மை ஷைத்தான் தூண்டுவான். மற்றவர்களை விட நாமே சிறந்தவர்கள் எனும் தவறான உணர்வை நம்மிடம் ஏற்படுத்துவான்.

மற்றவர்களை விட நாமே சிறந்தவர்கள் எனும் எண்ணத்தை முதலில் ஷைத்தான் நம்மில் ஏற்படுத்துவான். அந்த எண்ணம் மற்றவர்களுடன் நாம் பழகும் போதும், கொடுக்கல், வாங்கல் செய்து கொள்ளும் போதும் பாதிப்பை ஏற்படுத்தும். மற்றவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதும் வகையில் நமது சப்தத்தையும் மொழியையும் பயன்படுத்தி பேசுவதானது நம்மில் கர்வமும் தற்பெருமையும் ஏற்பட்டு விட்டது என்பதற்கு அடையாளமாகும். அந்நிலையில், மற்றவர்கள் தவறு செய்வதை, பாவங்கள் புரிவதை நாம் காணும் போது நாம் அவர்களிடம் கடினமாக நடந்து கொள்ள முற்படுவோம். சமூக ஊடகங்கள் போன்றவற்றில் பகிரங்கமாக அவர்களுக்கு எதிராகக் குறை கூறவும், அவமானப்படுத்தவும் முற்படுவோம். இவ்விதமான தவறான சிந்தனைகள் நமக்கு ஏற்படுமாயின், ஒரு காலத்தில் அவ்வாறு தான் நாமும் இருந்தோம்; இவர்களை விட மோசமாகக் கூட இருந்திருக்கலாம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், நாம் மார்க்கப்பற்று மிக்கவர்களாகக் காட்சி தந்த போதிலும், இன்னும் அவர்களைப் போன்று தவறுகளைச் செய்பவர்களாகக் கூட இருக்கலாம். நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறிய பின்வரும் கருத்துக்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும்: ”எவரது உள்ளத்தில் ஒரு வித்தின் அளவு (அதாவது துளியளவு) கூட அகந்தை, கர்வம் காணப்படுகிறதோ அவர் சொர்க்கம் செல்லமாட்டார்” என இறைத்தூதர்(ஸல்) கூறிய போது, ஒருவர் தனது ஆடைகள், காலணிகள் அழகாக இருக்க விரும்புகிறார் அது கர்வமாகக்

கருதப்படுமா? எனச் சில தோழர்கள் கேட்டார்கள். அதற்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள்: ”நிச்சயமாக, அல்லாஹ் அழகானவன்; அவன் அழகையே விரும்புகிறான். கர்வம் என்பது உண்மையை மறுப்பதாகும். மற்றவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதுவதாகும்” எனப் பதில் கூறினார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

எனவே, நாம் அடிக்கடி நம்மைப் பற்றியும் நமது உள்ளங்களைப் பற்றியும் சிந்திப்பது அவசியமாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் விஷயத்திலும் சக மனிதர்களின் விஷயத்திலும் நமது செயல்பாடுகள் எவ்வாறு உள்ளன எனவும் சிந்திக்க வேண்டும். சமூக ஊடகங்களில் நாம் பதிவு செய்யும் வார்த்தைகளையும் கவனிக்க வேண்டும். நமக்கு நெருக்கமாக உள்ளவர்களிடம் உபதேசங்களையும் நேர்மையான மதிப்பீடுகளையும் தேட முயல வேண்டும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
பணிவு எனும் பண்பு மற்ற மக்களால் விரும்பப்படுவது என்பது மட்டுமல்ல, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கும் அதுவே காரணமாக உள்ளது. ஒரு பணிவான மனிதர் மற்றவர்களால் எளிதில் வரவேற்கப்படுவார். அதன் காரணமாக, நற்காரியங்களைச் செய்வதற்கான வாய்ப்புகள் அவருக்கு அதிகம் ஏற்படும். ”தவாதுஃ” (பணிவாக) நடந்து கொள்வதன் மூலம் விமர்சனங்களை ஏற்கத் தயங்காத, தம்மிடம் குற்றம் குறைகள் காணப்பட்டால் அவற்றைச் சுட்டிக் காட்டுமாறு மற்றவர்களிடம் கேட்டுக் கொள்கின்ற தொழிலாளிகளாக, சக ஊழியர்களின் தோழர்களாக நாம் ஆக முடியும். இச்சீரியத் தன்மைகளை நம்மை நாம் முன்னேற்றிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கில் நம்மில் நாம் ஏற்படுத்திக் கொள்ள

முற்படுவோம். ஒரு குடும்பத் தலைவரிடம் காணப்படும் பணிவானது, அவரது குடும்பத்தார்களுக்கு அவரை மிகப் பிரியமானவராக ஆக்கும். அந்நிலையில், நாம் தவறுகள் செய்யும் போது குடும்பத்தார்களிடம் மன்னிப்பைத் தேடும் மனப்பக்குவத்தையும் பெறுவோம். அதன் மூலம் சூழ்நிலை மேற்கொண்டு சிறப்பாக அமையும். அகந்தையும் கர்வமும் கொண்டவருக்கு இம்மாதிரியான சிறந்த சூழ்நிலை ஏற்பட வாய்ப்பில்லை.

நம்மை நாம் பணிவான மக்களாக ஆக்கிக் கொள்வதன் மூலம் அல்லாஹ்வின் பார்வையில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவோமாக! எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமது உள்ளங்களைப் பயிற்றுவிக்கவும், அவற்றில் பணிவான தன்மைகளை ஏற்படுத்தவும் ஆற்றலை நமக்கு வழங்குவானாக! அதன் மூலம் நன்மைகளின் வாசல்கள் இம்மையிலும் மறுமையிலும் நமக்குத் திறக்கட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.